செ.வெ.எண்:03 நாள்:02.05.2018

# பத்திரிக்கைச் செய்தி

எரிசக்தி கணக்கீடு மற்றும் எரிசக்தி சேமிப்பினை(PEACE – Promotion of Energy Audit and Conservation of Energy ) மேம்படுத்துவது தொடர்பான விழிப்புணர்வு முகாம் மாவட்ட தொழில் மையத்தின் சார்பில் 08.05.2018 அன்று கரூர், நெசவு மற்றும் பனியன் உரிமையாளர்கள் சங்கம், 77, வடக்கு பிரதட்ணம் ரோடு, கரூர்–1 என்ற முகவரியில் **மாவட்ட ஆட்சித் தலைவர்** அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தமது உற்பத்தி மற்றும் சேவை நடவடிக்கைளுக்காக மின்சாரம், நிலக்கரி, விறகுகள், டீசல் ஃபர்னஸ் ஆயில் போன்ற எரிபொருட்களை அன்றாடம் பெருமளவில் பயன்படுத்தி வருகின்றன. எரிபொருட்களின் இயற்கை வள ஆதாரங்கள் குறைந்து கொண்டே வருவதாலும், தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செலவு அதிகரித்து வருவதாலும், தற்போது எரிபொருள் சேமிப்பு என்பது தவிர்க்க இயலாத நடவடிக்கை ஆகும். குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களின் எரிசக்தி பயன்பாட்டு திறனை மேம்படுத்திக் கொள்ளும் பொருட்டு, தமிழக அரசு நிறுவனங்களில் எரிபொருள் எரிசக்தி கணக்கீடு மற்றும் சேமிப்பு திட்டத்தின் மூலம் பல்வேறு சலுகைகள் வழங்குகிறது.

எரிசக்தி கணக்கீடு மற்றும் சேமிப்பு திட்டத்தின் மூலம், உற்பத்தி செய்யும் குறு, சிறு, மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் சான்று பெற்ற எரிசக்தி கணக்கரின் அறிக்கையின்படி எரிசக்தி திறனை மேம்படுத்திக் கொள்ளலாம். இதற்கு மாவட்ட தொழில் மையம் மூலம் எரிசக்தி கணக்கீடு செய்ய 50 சதவீதம் மான்யம் அதிகபட்சமாக ரூ.75,000/– வழங்கப்படும். மேலும் எரிசக்தி கணக்கீட்டு அறிக்கையின்படி தொழில் நிறுவனங்கள் செயல்படுத்தும் தொழில் நுட்பத்திற்கும் புதிதாக நிறுவப்படும் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்கு 25 சதவீதம் மான்யமும் அதிகபட்சமாக ரூ.2,00,000/– இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம்.

ஆகவே, தொழில் நிறுவனங்கள் விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு எரிசக்தி கணக்கீடு மற்றும் சேமிப்பு தொடர்பான நுட்பங்களை பெற்று தமது பொருட்களின் உற்பத்தி செலவினை குறைத்து, சந்தை போட்டிகளில் நிலைத்து நிற்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வெளியீடு:
செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
கரூர்.